**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.289/2026**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/ Pw1 |
| Name | : Unnikrishnan |
| Father/Husband's Name | : Gopalan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் நான் தற்போது ஆய்வாளராக செங்கலபட்டு ரயில்வே பாதுகாப்பு பிரிவில் பணியாற்றி வருகிறேன். கடந்த 27.09.2025 தேதி அன்று மதியம் 1.30 மணியளவில் ரயில்வே பாதுகாப்பு கட்டுபாட்டு அறையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில், வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் திருநெல்வேலிருந்து சென்னை செல்லும் ரயில் வண்டியின் எண். 20666 திருமனிக்கும், செங்கல்பட்டிற்கும் இடையே சென்று கொண்டிருந்தபோது, கல் எறியப்பட்டு அந்த ரயில் வண்டியின் C4 seat No. 43 யின் ஜன்னல் கண்ணாடி உடைக்கப்பட்டது. அந்த தகவல் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக குற்ற எண். 429/2025 பிரிவு 153 ரயில்வே சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 30.12.2025ம் தேதி நானும், என்னுடன் குணசேகர் தலைமை காவலர், மற்றும் பாண்டியம் தலைமை காவலர் ஆகியோர்கள் செங்கல்பட்டு ரயில்நிலையம் என்ற இடத்தில் ரோந்து பணியில் இருந்தபோது, KM 62/200 அங்கு ஆஜர் எதிரி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி, வந்து கொண்டிருந்த வரை தடுத்து நிறுத்தி விசாரணை செய்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறினார். மேலும், ஆஜர் எதிரி அடிக்கடி சம்பவ இடத்திற்கு வருவதாகவும்,

அங்கு நபர்களுடன் சேர்ந்து, பேசுவதாகவும், 3 மாதத்திற்கு முன்பு, நண்பர்களுடன் பேசி கொண்டிருந்தபோது, கல்லை எடுத்து நண்பரை நோக்கி வீசிய போது, அது தவறி ரயில் பெட்டியின் மீது பட்டதாக சொன்னார். அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்சொன்ன காவலர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு, காவலர்களிடம் கையெழுத்து வாங்கினேன். பிறகு எதிரியுடன் சம்பவ இடம் சென்று மேற்சொன்ன காவலர்கள் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர், எதிரியை உரிய காரணம் கூறி, கைது செய்து எதிரியுடன் நிலையம் சேர்ந்து எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன்.

பின்னர், சேதமடைந்த ரயில்வே சொத்தின் மதிப்பு குறித்து, SSE யிடம் விசாரித்து, சான்று பெற்றேன். அந்த சான்று **அதசா.ஆ5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், விசாரணையை முடித்து, எதிரியின் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை:**

கல் வீசியதாக சொல்லப்படும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ரயில்வே கட்டுபாட்டு அறையிலிருந்து தான் ரயில் கண்ணாடி உடைந்ததாக தகவல் கிடைத்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் ரயிலில் பயணம் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த பயணியும் எதிரியை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். எந்த அடையாள அணிவகுப்பும் நடத்தவில்லை என்றால் சரிதான். சிசிடிவி பதிவுகள் ஏதேனும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. சம்பவம் 27.09.2025ல் நடந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரியை 30.12.2025 ம் தேதி கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். எதிரியை காலை 9.15 மணியளவில் KM 62/200 ல் வைத்து கைது செய்தேன். 3 மாத கால தாமதமாக தான் எதிரியை கைது செய்தேன் என்றால் சரிதான். பொது மக்களை நான் விசாரிக்கவில்லை என்றால் அந்த இடத்தில் பொது மக்கள் அதிகமாக இருக்காது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் எதிரி கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காவலர்கள் தான் சாட்சியாக இருந்தார்கள் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து நீதித்துறை நடுவர் முலமாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. ஆஜர் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்கு மூலம் தரவில்லை என்றால் சரியல்ல. எறியப்பட்டதாக சொல்லப்படும் கல்லை கைப்பற்றினேனா என்றால் இல்லை. எதிரியை இந்த வழக்கில் ஈடுபட்டார் என்பதை

குறித்து எந்த அறிவியல் பூர்வமான ஆதாரம் இல்லை என்றால் சரிதான். எதிரியை இந்த வழக்கில் ஈடுபட்டார் என்பதை குறித்து எந்த புகைப்படமுமில்லை என்றால் சரிதான். எத்தனை கி.மீ வேகத்தில் அந்த ரயில் பயணம் செய்த விவரம் தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வந்தே பாரத் ரயில் செல்லும் போது, கல் பட்டு பக்கத்தில் வேறு ஒரு ரயில் சென்றிருந்தால், அதில் பட்டு கண்ணாடி உடைய வாய்ப்புள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த சமயத்தில் அதன் அருகில் எந்த ரயிலும் செல்லவில்லை. ரயில் வண்டியின் கண்ணாடியின் தரம் குறைவாக இருந்திருந்தால், வேகத்தின் காரணமாக கண்ணாடி உடைய வாய்ப்புள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதசா.ஆ5 வழக்கிற்க்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. seat No. 43 and 44 ல் யார் பயணம் செய்தார் என்றால் கல்பனா மற்றும் ஆனந்த். ஆனந்தயை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 19.01.2026 ல் விசாரித்தேன். எதிரியை ஏற்கனவே கைது செய்து, வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. C7 Seat No.20 ன் கண்ணாடி உடைந்ததை பற்றி எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே உடைந்த ரயில் ஜன்னலின் கண்ணாடிக்கு காப்பீடு பெறுவதற்காக எதிரியை கைது செய்து, வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் பின்னிட்டு ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. கட்டளை 11ன் கீழ் விதிமுறைகளை கடமைபிடிக்காமல் சட்டத்திற்கு புறம்பாக எதிரியை கைது செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.